03.07.2017

தினமணி

## கோவையில் 24 மணி நேரத்தில் 30 லட்சம் விதைப் பந்துகள் தயாரிக்கும் பணி தொடக்கம்



கோவையில் விழித்தெழு அறக்கட்டளை மற்றும் தன்னார்வ அமைப்புகள் சார்பில் 24 மணி நேரத்தில் 30 லட்சம் விதைப் பந்துகள் தயாரிக்கும் உலக சாதனை நிகழ்வு சனிக்கிழமை தொடங்கியது.

விழித்தெழு அறக்கட்டளை மற்றும் பல்வேறு தன்னார்வ அமைப்புகள், அரிமா சங்கங்கள் இணைந்து கோவையின் பசுமையைப் பாதுகாக்க விதைப் பந்துகள் உருவாக்கி வனப்

பகுதியில் வீசத் திட்டமிட்டுள்ளனர். இதில், ஒரே நாளில் 30 லட்சம் விதைப் பந்துகளை உருவாக்கி உலக சாதனைக்கு அனுப்பவும் முடிவு செய்தனர்.

அதன்படி, ஹிந்துஸ்தான் கல்லூரியில் விதைப் பந்துகள் தயாரிக்கும் பணி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்குத் தொடங்கியது. கோவையில் உள்ள பல்வேறு கல்லூரி, பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவர்கள், இளைஞர்கள், தன்னார்வலர்கள், சமூக சேவை அமைப்புகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் பங்கேற்றனர். புளியன், வேம்பு, புங்கன் உள்ளிட்ட 30 வகையான மரங்களின் விதைகளைக் கொண்டு பந்துகள் தயாரிக்கும் பணி தொடங்கியது.

இதில், விதைகளுடன் செம்மண், மாட்டு சாணங்களைக் கொண்டு கையடக்க பந்துகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் இந்தப் பந்துகள் 5 நாள்கள் முதல் 7 நாள்கள் வரை காயவைக்கப்படும். இதன் பிறகு கோவை மாநகர், புறநகர் பகுதிகளில் சாலையோரப் பகுதிகள், வனப் பகுதிகள், காடுகள் ஆகிய இடங்களில் விதைப் பந்துகளை வீசவும் திட்டமிட்டுள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விற்பனைக்காக வெளியூர் செல்லும் துடைப்பம்

வாடிப்பட்டி, இயந்திரமயமாகி போன இன்றைய வாழ்க்கையில் நாம் அன்றாடம் பயன்படுத்தி வந்த பொருட்களில் பலவற்றை 1990களுக்கு பிறகு தொலைத்து வந்துள்ளோம். அவற்றில் தென்னை விசிறி, நார்களை கொண்ட ஒற்றடை குச்சி அரிதாகி போனது.
அந்த வரிசையில் வந்து சேர்ந்துள்ளது வீடு கூட்டும் தென்னைமட்டை ஓலையிலிருந்து பிரிக்கப்படும் துடைப்பம், வீட்டை குனிந்து கூட்டும் சிரமங்களை தவிர்க்க வீட்டிற்க்குள்ளே, வெளியே என நீளமான நவீன பிளாஸ்டிக் உள்ளிட்ட துடைப்பங்களை அதிகம் பயன்படுத்தி வரும் நிலையில், வாடிப்பட்டி பகுதியில் இருந்து வெளியூர், வெளி மாநிலங்களுக்கு சென்று துடைப்பத்தை விற்பனை செய்து வருகின்றனர் சிலர். சாந்தகுமார்: கடந்த10 ஆண்டுகளாக துடைப்பம் விற்பனை செய்து வருகிறேன். வாடிப்பட்டி, சோழவந்தான் அணைப்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புகளில் மொத்தமாக துடைப்பத்தை வாங்கி விற்கிறோம். தனியாக வாடகை வண்டியில் எடுத்து சென்றால் நஷ்டம் ஏற்படும் என்பதால், சாலைகளில் செல்லும் போக்கு வண்டிகளுக்காக காத்திருந்து ஏற்றி, வெளியூர், வெளிமாநிலங்களுக்கு சென்று நாள் கணக்கில் சுற்றி திரிந்து வியாபாரம் செய்து வருகிறோம். ஒரு துடைப்பத்திற்கு 5 ரூபாய் லாபம் கிடைக்கும். இது சீசன் வியாபாரம் தான், மற்ற நாட்களில் கூலி வேலைக்கு செல்வோம். மக்கள் நீளமான துடைப்பத்தையே விரும்பி வாங்குகின்றனர். தென்னை துடைப்பத்திற்கு மக்கள் மத்தியில் இன்றும் வரவேற்ப்புள்ளது.
சீனிவாசன்: மொத்தமாக வாங்கும் துடைப்பத்தின் தூர்களை வெட்டி, குட்டையானவற்றை கழித்து, தரம் பிரித்து வியாபாரத்திற்கு எடுத்து செல்வோம், தோப்புகள் இல்லாத கிராமங்களில் இவற்றின் தேவை அதிகம் இருக்கும்,

நகர்புறங்களில் தெருக்கள் அனைத்தும் சிமென்ட் தளமானதால் இவற்றின் பயன்பாடு குறைவு. தேய்மானம் அதிகம் என்பதால் தேவை இருந்துகொண்டே இருக்கும். வியாபார பயணத்தை குறைந்த செலவில் முடிக்க சரக்கு வண்டிகளுக்காக காத்திருந்து, காலை முதல் மாலை வரை சாலையில் செல்லும் வண்டிகளை மறிக்கும் முயற்சியில் பாதிப்பொழுது வீணாகி போன நாட்களே அதிகம், என்றனர்.

## மட்டை விலை உயர்வால் நார் தொழில்... முடங்குகிறது! பருவமழையால் பணிகளும் பாதிப்பு

பொள்ளாச்சி : தென்னை நாருக்கு திடீர் விலை உயர்வு கிடைத்ததால் மகிழ்ச்சி அடைந்த உற்பத்தியாளர்கள், ஒரே வாரத்தில் மட்டை விலையும் உயர்ந்ததால் அதிர்ச்சி அடைந்து, தொழிலை முடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் தென்னை சாகுபடிக்கு பொள்ளாச்சி, ஆனைமலை, நெகமம் உள்ளிட்ட, கோவை மாவட்டத்தின் தென்பகுதி முதலிடத்தை பிடித்துள்ளது. இதேபோல, தென்னையில் இருந்து கிடைக்கும் தேங்காய், கொப்பரை, இளநீர், மட்டை மற்றும் தென்னை ஓலைகளின் தயாரிப்புகள் மதிப்பு கூட்டப்பட்டு, வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுவதோடு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி தவிர, தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன. 350க்கும் மேற்பட்ட நார்

தொழிற்சாலைகளில் தயாராகும் நார் பண்டல்கள் சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நார்கட்டிகள், 30க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, இத்தொழிலுக்கு புதிதாக பலர் அறிமுகமாகினர். கோடிக்கணக்கில் முதலீடு செய்து சிலர் வெற்றியும் பெறுகின்றனர். வேறு சிலர், பெருத்த இழப்பு ஏற்பட்டு ஏமாற்றமடைகின்றனர்.

நலிவடையும் தென்னை நார்தொழில்

பொதுவாக, தென்னைநார் தொழில் தற்போது நலிவடைந்து வருகின்றன. தற்போதைய நிலையில் தென்மேற்கு பருவமழை துவங்கினாலும், சில இடங்களில் பலமாகவும், பல இடங்களில் மிகக்குறைவான அளவே பெய்துள்ளன.

ஆனாலும், பாசன கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் அளவுக்கு மழை பெய்யவில்லை. ஆனாலும், தற்போதைய மழையால், பெரும்பாலான நார் தொழிற்சாலைகள் முடங்கியுள்ளன.

இதற்கு, மட்டையை ஊற வைக்க போதிய தண்ணீர் கிடைக்காததும், தென்னை மட்டைகள் கிடைக்காததும் காரணமாக சொல்லப்படுகிறது.

மட்டை கிடைப்பதில் சிக்கல்

கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி நீடிப்பதால், தென்னைகளில் போதிய காய்ப்பு இல்லை. இந்நிலை தொழிலுக்கு மூலதனமான தேங்காய் மட்டை கிடைப்பதில் சிக்கல் தொடர்ந்துள்ளது.

தவிர, கர்நாடகா மாநிலத்தில் இருந்தும் தமிழக நார் தொழிற்சாலை உரிமையாளர்கள் குறைந்த விலைக்கு மட்டையை கொள்முதல் செய்து வந்துவிட்டனர்.

ஒரு சிலர் அங்கேயே சென்று, நார் தொழிற்சாலைகளை துவங்கி விட்டனர். இதனால், வெளிமாநிலத்தில் இருந்தும் மட்டை கிடைப்பதில்லை.

இதனால், பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் தேங்காய் மட்டையை 'இருப்பு' வைத்துள்ள ஒரு சில நார் தொழிற்சாலைகள் மட்டும் செயல்படுகின்றன.

இது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நார்கழிவு (மஞ்சி) அளவை பாதிக்கும் கீழ் கொண்டு வந்துள்ளது. அதாவது, நாளொன்றுக்கு, 300 டன் என்ற அளவில் இருந்து, 100 என்ற அளவுக்கு குறைந்து விட்டது.

இச்சூழ்நிலையில், நார்(மஞ்சி) விலை உயராதா என, தொழிற்சாலை உரிமையாளர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். வழக்கமாக மழைக்காலம் என்றால் தமிழகத்தில் மஞ்சி கிடைக்காது என்ற நிலை இருந்தது.

திடீரென, வெளிநாட்டு கொள்முதல் அமைப்புகள் நார் பண்டில்களுக்கான கொள்முதல் விலையை, 400 ரூபாயாக அதிகரித்தனர். இதனால், திருப்தி அடைந்த நார் தொழிற்சாலை உரிமையாளர்கள் உற்பத்தியை அதிகரிக்க துவங்கினர்.

இச்சூழலில், மூலப்பொருளான மட்டைக்கு திடீர் கிராக்கி ஏற்பட்டது. விசாரித்தபோது, ஆயிரம் மட்டைகளின் விலை 1,500 ரூபாயாக உயர்ந்துள்ளது தெரிந்து, நார் தொழிற்சாலை உரிமையாளர்கள் அதிர்ச்சி
அடைந்தனர்.

நாள் உற்பத்தியாளர்கள் கவலை

இதுகுறித்து, நார் உற்பத்தியாளர்களிடம் கேட்டபோது, நாருக்கு தற்போது, 320 - 420 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், திருப்தி அடைந்த நாங்கள், திடீரென மட்டை விலை உயர்ந்திருப்பதால் வேதனைக்கு ஆளாகியுள்ளோம்.

போதாக்குறைக்கு, திடீர் மழையும் பெய்வதால் தொழில் முடக்கம் கண்டுள்ளது' என்றனர்.

# தமிழகத்தில் முந்திரி ஏற்றுமதியை அதிகரிக்க வாரியம் தேவை! விவசாயிகள், வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை



முந்திரி உற்பத்தி, பதப்படுத்துதல், ஏற்றுமதி அதிகரிக்க முந்திரி வாரியம் அமைக்க வேண்டும் என முந்திரி விவசாயிகள், வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், அரியலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, தேனி ஆகிய மாவட்டங்களில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ெஹக்டர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் முந்திரி

கொட்டையை உடைத்து பதப்படுத்தி தரம் பிரிக்கும் சிறு நிறுவனங்கள் 420 உள்ளன.

முந்திரி பயிர் ஆண்டுக்கு ஒரு முறை தை மாதம் பூ விட்டு பங்குனி, சித்திரை மாதம் அறுவடைக்கு தயாராக வரும். கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் வைத்த முந்திரி மரங்கள் மட்டுமே உள்ளன. கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 'தானே' புயலில் பாதித்த முந்திரி மரங்கள் காய்ப்பு தன்மை வெகுவாக குறைந்து விட்டன. காய்ப்பு தன்மை அதிகம் கொண்ட வி.ஆர்.ஐ.,2 ஒட்டுரக கன்றுகள் போதிய அளவு தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

ஆப்பிரிக்கா நாடுகளில் உள்ள ஐவரிகோஸ்ட், தான்சானியா, கானா உள்ளிட்ட பகுதியில் இருந்து இறக்குமதி கொட்டையால் பதப்படுத்தும் பணி மட்டும் ஓரளவு தொய்வில்லாமல் நடந்து வருகிறது.

முந்திரி கொட்டை திறந்தவெளி களத்தில் 3 நாட்கள் சூரிய வெளிச்சத்தில் காய வைத்து கொதி கலனில் அவிழ்த்து தொழிலாளர்களால் பதமாக உடைக்கப்படுகிறது. பின்னர், சூடான அறையில் 70 டிகிரி வெப்பத்தில் பதப்படுத்தப்பட்டு, முந்திரியின் சிகப்பு தோல் நீக்கப்பட்டு, பருப்பு ரகம் வாரியாக பிரிக்கப்பட்டு, மீண்டும் 70 டிகிரி வெப்பத்தில் பதப்படுத்தப்பட்டு விரைவில் கெடாமல் பாதுகாக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. முந்திரி தொழிலில் முதலீடு அதிகமாகவும், லாபம் வெகுவாக குறைந்து விட்டதால் முந்திரி தொழிலில் போதிய ஆர்வம் இல்லாமல் உள்ளனர்.

முந்திரி விவசாயத்தை பெருக்கவோ, முந்திரி பதப்படுத்தும் தொழிலை ஊக்கப்படுத்தவோ தோட்டக்கலைத்துறை, விற்பனைத்துறை சார்பில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. விவசாயிகள், வியாபாரிகள், ஏற்றுமதியாளர்களின் ஆர்வம் காரணமாக உற்பத்தி, பதப்படுத்துதல் நடக்கிறது. முந்திரி உற்பத்தி, பதப்படுத்துதல், ஏற்றுமதியை அதிகரிக்க முந்திரி தொழில் வாரியம் அமைக்க வேண்டும் என முந்திரி ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தும் அரசு கண்டு கொள்ளவில்லை.

கேரளா மாநிலத்தில் குறைந்த அளவில் முந்திரி பயிரிட்டாலும், உற்பத்தி, பதப்படுத்துதல் தொழிலை மேம்படுத்த அம்மாநில அரசு முந்திரி வாரியம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளது. மாவட்டத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகளான எம்.எல்.ஏ.,க்கள், எம்.பி.,க்கள் முந்திரி வாரியம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# குன்னூர் ஏல மையத்தில் தேயிலைத்தூள் கடும் வீழ்ச்சி



நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு இணையதளம் வாயிலாக தேயிலை ஏலம் நடைபெறுகிறது. இதில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்கள் கலந்து கொள்ளலாம். விற்பனை எண் 26–க்கான ஏலம் கடந்த 29, 30–ந் தேதிகளில் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு 20 லட்சத்து 70 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 13 லட்சத்து 95 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இலைரகமாகவும், 6 லட்சத்து 75 ஆயிரம் கிலோ தேயிலை தூள் டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் 68 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. விற்பனை தேயிலை தூளின் அளவு 12

லட்சத்து 71 ஆயிரம் கிலோ ஆகும். இதன் மதிப்பு ரூ.9 கோடி 32 லட்சம் ஆகும்.

ஏலத்தில் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் கிலோவுக்கு 4 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. உயர்ந்தப்பட்ச விலையாக சி.டி.சி. தேயிலை தூளுக்கு கிலோவுக்கு 216 ரூபாயும், ஆர்த்டோக்ஸ் தேயிலை தூளுக்கு கிலோவுக்கு ரூ.266 விலையாகவும் இருந்தது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 65 ரூபாய் முதல் 71 ரூபாய் வரையும், விலை உயர்ந்த தேயிலை தூள் 105 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 68 ரூபாய் முதல் 75 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 110 ரூபாய் முதல் 145 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 27–க்கான ஏலம் எதிர் வரும் 6,7 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. ஏலத்துக்கு மொத்தம் 17 லட்சத்து 66 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## கோடைநெல் அறுவடை தாமதமாக தொடங்கியது மகசூல் குறைந்ததால் விவசாயிகள் விரக்தி



தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவதும் வழக்கம். காவிரி நீரை நம்பி ஆற்றுப்பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படும். நெல் சாகுபடி பரப்பளவு மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்து அமையும்.

வழக்கமாக மேட்டூர் அணை காவிரி டெல்டா பாசனத்துக்காக ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படும். ஆனால் காவிரியில் தமிழகத்திற்குரிய தண்ணீரை கர்நாடகஅரசு திறந்துவிடாததாலும், போதிய அளவு மழை பெய்யாததாலும் கடந்த 6 ஆண்டுகளாக மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை. ஆழ்குழாய் கிணறு மூலமே நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது.

அறுவடை

தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் ஆழ்குழாய் கிணறு மூலம் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இந்த நெல் வளர்ச்சி பெற்று அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. பொதுவாக குறுவை சாகுபடி தொடங்கப்படுவதற்கு முன்பே கோடை நெல் அறுவடை நிறைவடைந்துவிடும். ஆனால் தற்போது குறுவை சாகுபடி பணி ஆங்காங்கே நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் கோடைநெல் அறுவடை பணி தாமதமாக தொடங்கியுள்ளது. தஞ்சை கரந்தை பகுதியில் கோடை நெல் அறுவடை பணி நேற்று நடந்தது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகள் உடனே மூட்டைகளில் கட்டி லாரிகளில் ஏற்றினர். இந்த நெல்லை கொள்முதல் செய்வதற்காக ஆங்காங்கே நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் சிலர் கூறும்போது, மழையின்றி ஆழ்குழாய் கிணறு மூலம் நெல் சாகுபடி செய்யப்பட்டாலும் மகசூல் மிகவும் குறைவாகவே கிடைத்துள்ளதால் விரக்தி அடைந்துள்ளோம். இதே நிலை நீடித்தால் விவசாயம் செய்ய ஆர்வம் குறைந்துவிடும். எனவே ஆங்காங்கே ஆறுகளில் தடுப்பணைகள் கட்ட வேண்டும். குளம், ஏரிகளை தூர்வாரி மழைகாலங்களில் வரும் தண்ணீரை தேக்கி வைக்க வேண்டும். காவிரியின் குறுக்கே கர்நாடகஅரசு அணை கட்டுவதை தடுத்து நிறுத்துவதுடன் நமக்குரிய தண்ணீரை தொடர்ந்து பெற தமிழகஅரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளிடம் பாகுபாடு பார்க்காமல் அனைவருடைய பயிர்க்கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும். நெல்லுக்குரிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றனர்.

## சமுத்திரம் ஏரி தூர்வாரப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு



தஞ்சை-நாகை சாலையில் ஞானம்நகர் பகுதியில் சமுத்திரம் ஏரி உள்ளது. அந்த காலத்தில் 800 ஏக்கர் பரப்பளவில் காணப்பட்ட இந்த ஏரி இன்றைக்கு 242 ஏக்கர் பரப்பளவாக குறைந்துவிட்டது.

இந்த ஏரி நிரம்பினால் ஆண்டுதோறும் அந்த பகுதியில் சாகுபடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் தட்டுப்பாடு இல்லாதநிலை இருந்து வந்தது. ஆனால் இந்த ஏரி முறையாக பராமரிக்கப்படாததால் செடி, கொடிகள் வளர்ந்து காணப்படுவதுடன் மணல் திட்டுகளும் உருவாகியுள்ளன. மேலும் ஆங்காங்கே ஏரியை ஆக்கிரமித்து வருவதால் ஏரியின் பரப்பளவு இன்னும் குறைய வாய்ப்பு உள்ளது.ஏரியை ஆழப்படுத்தி படகு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதற்காக 2012-ம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால் அந்த பணி அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த ஏரியை பராமரிக்கவில்லை என்றால் ஏரி இருந்ததற்கான அடையாளமே தெரியாமல்போய்விடும்.

விவசாயிகள் கருத்து இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:-

சமுத்திரம் ஏரி நிரம்பினால் அந்த தண்ணீரை பயன்படுத்தி குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போக சாகுபடிகளும் செய்ய முடியும். ஆனால் ஏரி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால் அதன் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. ஏரிக்கரையில் சிறுவர்களுக்கான பூங்கா அமைத்து, 1 கிலோமீட்டர் தூரத்திற்கு நடைபாதை அமைப்பதுடன் படகுசவாரி வசதியை ஏற்படுத்துவதற்காக ரூ.1½ கோடியில் திட்டம் தீட்டப்பட்டு பூமிபூஜையும் 2012-ம் ஆண்டு போடப்பட்டது. தொடக்கத்தில் வேகமாக தொடங்கிய இந்த பணி பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

ஏரியில் மணல் தேங்கி மேடாக காணப்படுகிறது. செடி, கொடிகள் எல்லாம் வளர்ந்து காணப்படுகிறது. இரவு நேரங்களில் லாரிகளில்

கழிவுநீர் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் தொற்றுநோய் பரவும் அபாயமும் உள்ளது. விவசாயிகளின் பயன்பாட்டிற்காக குளம், ஏரிகளில் இருந்து மணல் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்படி மணல் அள்ளுவதால் குளம், ஏரி ஆழப்படுத்தப்படுவதுடன், தண்ணீர் தேங்கும் பரப்பளவும் அதிகரிக்கும். இந்தநிலையில் ஏரி, குளங்கள் தூர்வாரப்படும் என முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து இருக்கிறார். அதன்படி சமுத்திரம் ஏரியை தூர்வாரி ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகளின் அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் சங்க மாநாட்டில் தீர்மானம்



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் நீடாமங்கலம் ஒன்றிய குழுவின் 25-வது ஆண்டு மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு சங்க ஒன்றிய தலைவர் பூசாந்திரம் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கலியபெருமாள், மாவட்ட பொருளாளர் ராஜமாணிக்கம், மாவட்ட துணைச்செயலாளர் ரெத்தினம், ஒன்றிய செயலாளர் நாகூரான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி பேசினார்.

மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

2016-2017-ம் ஆண்டிற்கான பயிர் இன்சூரன்ஸ் முறைகேடு இல்லாமல் வழங்க வேண்டும். விவசாயிகளின் அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். குறுவை தொகுப்பு திட்டத்தில் நடவு எந்திரம் மூலம் நடவு நட்டால் ரூ. 4 ஆயிரம் வழங்குவதை போல், கை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ. 4 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஒன்றிய செயலாளர் கைலாசம், விவசாய தொழிலாளர் சங்க செயலாளர் அண்ணாதுரை, வாலிபர் சங்க ஒன்றிய செயலாளர் ஜான்கென்னடி, மாதர் சங்க ஒன்றிய செயலாளர் சுமதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.